நாள்= 06.12.2019

OS.No. 13/2018

வா.சா. . திருமதி. லீலா குமாரி த/பெ. கோபாலகிருஷ்ணன்

சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** =

நான் கிரய ஒப்பந்தம் 13.04.2015 அன்று 1ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்தினேன். மேற்படி ஒப்பந்தம் சர்வே எண்.57A/1A-2-ல் 41 செண்ட் இடத்திற்கும் சர்வே எண் 57A/1A-3-ல் 45 செண்ட் இடமும் ஆகமொத்தம் 86 செண்ட் நிலத்தில் 27½ செண்ட் நிலத்திற்காக போடப்பட்டது. மேற்படி சொத்துக்கள் கோவூரில் இருக்கிறது. கிரய ஒப்பந்தம் ரூ.65,00,000/-த்திற்கு போடப்பட்டது. அதற்கு முன்பணமாக ரூ.5,00,000/- ரொக்கமாக 1ஆம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். மேற்படி ரூ.5,00,000/-த்தை 1ஆம் பிரதிவாதியிடம் கொடுத்ததை நான் எனது வருமானவரி கணக்கில் தாக்கல் செய்து காட்டியிருக்கிறேனா என்று கேட்டால் எனது நகைகளை விற்று மேற்படி பணத்தை நான் கொடுத்ததால் வருமானவரி கணக்கில் எப்படி காட்டியிருக்க முடியும். மேற்படி கிரய ஒப்பந்தம் 11 மாத காலத்திறகுள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாங்கள் ஒப்பந்தம் ஏற்படுத்தினோம். நான் மீதி தொகையை தயார் செய்து வைத்திருக்கிறேன் என்றும், எனவே கிரய பத்திரம் ஏற்படுத்திக் கொடுக்க வரும்படியும் பிரதிவாதிகளுக்கு நான் கடிதம் எதுவும் அனுப்பவில்லை. ஆனால் பிரதிவாதிகளிடம் நேரில் சென்று நான் அதை தெரிவித்தேன். 1ஆமி பிரதிவாதியின் கணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது மேற்படி 11 மாத காலத்திறகுள்ளும், அதற்கு பிறகும் என்னிடம் கிரய பத்திரத்தை முடிப்பதற்கு வருமாறு பிரதிவாதிகள் கேட்டார்கள் என்றும், நான் தான் கிரயம் முடிப்பதற்கு வரவில்லை என்றும் சொல்வது சரியல்ல. நாங்கள் கிரயம் முடிப்பதற்கு வரும்படி பிரதிவாதிகளை அழைத்த போது அவர்கள் அதாவது 1ஆம் பிரதிவாதியும் அவரது கணவரும் வெளி நாட்டிற்கு சென்றுவிட்டார்கள். மேலும் நான் அவர்களுக்கு போன் செய்த போது அவர்கள் வெளிநாட்டில் இருப்பதாகவும், வந்தவுடன் கிரயம் செய்து தருவதாகவும் சொன்னதாக சாட்சி தாமாக தெரிவித்தார். 2015ஆம் ஆண்டு 11-வது மாதத்தில் அதாவது நவம்பர் மாதத்தில் 1ஆம் பிரதிவாதியும் அவரது கணவரும் அவர்களது மகள் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். அவர்கள் வெளிநாட்டிலிருந்த போது நவம்பர் மாதத்தில் முதல் முறையும், பின்னர்

மார்ச் மாதத்திலும் நான் அவர்களுக்கு அவ்வாறு போன் செய்து கேட்டேன். நான் அவ்வாறு பிரதிவாதிகளுக்கு போன் செய்து கேட்கவில்லை என்றும், இந்த வழக்கிற்காக அவ்வாறு போன் செய்து கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல. 1ஆம் பிரதிவாதியின் கணவர் மருத்துவமனையில் இருந்தபோதும் அவர்கள் கிரயம் முடிப்பதற்கு தயாராக இருப்பதாக என்னிடம் தெரிவித்த போதும் நான் தான் கிரயம் முடிப்பதற்கு தயாராக இல்லை என்றும், அதன் பின்னர் கிரயம் முடிப்பதற்கு வரும்படி பிரதிவாதிகள் எனக்கு லெட்டர் அனுப்பிய பிறகும் நான் கிரயம் முடிப்பதற்கு தயாராக இருக்கவில்லை என்றும் சொல்வது சரியல்ல. அவ்வாறு எனக்கு லெட்டர் எதுவும் அனுப்பவில்லை. மேற்படி கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்யப்போவதாக பிரதிவாதிகள் தெரிவித்த பின்னரும் நான் கிரயம் முடிப்பதற்கு தயாராக இல்லாததால் மேற்படி கிரய முன்பணமான ரூ.5 லட்சத்தை எனது வங்கி கணக்கில் பிரதிவாதிகள் செலுத்தினார்கள் என்றும் சொல்வது சரியல்ல. திரு.கோபாலகிருஷ்ணன் எனது கணவர். 07.10.2016 அன்று 1ஆம் பிரதிவாதியின் கணவர் திரு.விஜயகுமார் எனது கணவரின் வங்கி கணக்கில் ரூ.5 லட்சம் வரவு வைத்துள்ளார் என்று சொல்வது சரியல்ல. எனது கணவருக்கும் மேற்படி விஜயகுமாருக்கும் வேறு தொழில் நிமித்தம் உள்ள கொடுக்கல் வாங்கலில் அந்த தொகை செலுத்தப்படிருக்கலாம்.

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு மாற்றி வைக்கப்பட்டது.